பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 29 ஞாயிற்றுக்கிழமை 14.09.2025 கதிர் 308

இது ரகசியம் அல்ல!

கடந்த சில நாட்களாக சமூக ஊடகங்களில் கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்ட விடயம், முன்னாள் அரசுத் தலைவர்களாக சந்திரிகா, ☞2

முன்னாள் அரசுத் தலைவர்கள் உரித்து நீக்க சட்டமூலத்தை தமிழ் அரசுக் கட்சி ஆதரிப்பதில்லை என்ற

# முடிவு சிறீதரனுடையது

## சாணக்கியன் தெரிவிப்பு



முன்னாள் அரசுத் தலைவர்களின் உரித்துக்களைக் குறைக்கும்சட்டமூலத்தைஇலங்கைத்தமிழ்அரசுக்கட்சி ஆதரிப்பதில்லைஎன்ற முடிவைநாடாளுமன்றக் குழுத் தலைவரே அறிவித்தார் என்று கட்சியின்மட்டக்களப்பு மாவட்டநாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் வாக்களிப்புக்கு விடப்பட்டபோது தமிழ் அரசுக் கட்சிஉள்ளிட்டதமிழ்க்கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும்அதில்பங்கேற்கவில்லை. ஆனால், அந்தச் சட்ட ☞2

# ட்ரம்பின் வரியை எதிர்த்து இலங்கையில் போராட்டம்



இலங்கையில் இருந்து ஏற்றுமதியாகும் பொருள்களுக்கு 25 சதவீத வரி விதித்து அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விடுத்த அறிவிப்புக்கு எதிராக இலங்கையில் முதல் ஆர்ப்பாட்டம் நேற்று மதியம் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தின் பிரதான நுழைவாயிலுக்கு முன்னால் இடம்பெற்றது. சுதந்திர வர்த்தக வலயம் மற்றும் பொது ஊழியர் சங்கத்தின் 'கட்டுநாயக்க ஸ்டார் கார்மென்ட்' கிளையின் ஊழியர்களால் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

டிரம்ப் விதித்த கட்டணங்கள் காரணமாக, 'ஸ்டார் கார்மென்ட்' தொழிற்சாலை ஊழியர்களுக்கு ☞2

# பாலஸ்தீன விவகாரத்தில் ஐ.நாவின் தீர்மானத்திற்கு இலங்கை வரவேற்பு

பாலஸ்தீனப் பிரச்சினைக்கு, அமைதிக்கான தீர்வு மற்றும் இரு நாடுகள் தீர்வை செயற்படுத்துதல் குறித்த நியூயோர்க் பிரகடனத்தை ஆதரிக்கும் தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை ஏற்றுக்கொண்டதை இலங்கை வரவேற்பதாக அறிவித்துள்ளது.

இந்த முக்கியமான முயற்சியில் தலைமை தாங்கியதற்காக சவுதி அரேபியா மற்றும் பிரான்சுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்றும் இலங்கை குறிப்பிட்டுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில, ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் மற்றும் தொடர்புடைய ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களின் நோக்கங்கள் மற்றும் கொள்கைகளுக்கு இணங்க, பலஸ்தீன மக்களின் அரச மதிப்புக்கான மறுக்க முடியாத உரிமைக்கு, இலங்கை தனது அசைக்க முடியாத ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்துகிறது என்றும் குறிப்பிட்டுள்ளது.

# மாகாண சபைத் தேர்தலைக் கண்டு ஆளும்தரப்பு எதற்காக அஞ்சுகிறது?

## திஸ்ஸ அத்தநாயக்க கேள்வி

மாகாணசபைத் தேர்தலைக் கண்டு ஆளும்தரப்பு எதற்காக அஞ்சுகின்றது? இத்தேர்தல் நடத்தப்பட்டால் அரசாங்கத்துக்குள்ள உண்மையானமக்கள்ஆணைஎன்ன என்பது வெளிப்படும். அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பதைப் போன்று மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறும் கூட்டு எதிரணியாக அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்போமென ஐக்கிய மக்கள் சக்தியின் ☞6

# ஒன்றரை வருடத்தில் ரூ. 270 மில்லியன் ரமித் கெஹலிய சேர்த்த சொத்துக்கள்

## உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலியரம்புக்வெலபதவியில்இருந்த காலத்தில் ஒன்றரை வருடங்களில் ரூ. 270 மில்லியன் சொத்துக்களைச் சேர்த்தார் என்று அவரது மகன் ரமித் ரம்புக்வெல மீது லஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு வழக்குத் தாக்கல் செய்துள்ளது. கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நேற்று இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ☞2

முன்னாள் அரசுத் தலைவர்கள் உரித்து நீக்க

# சட்டமூலத்தை எதிர்த்து வாக்களிக்காத நாமல் ராஜபக்ச மக்களை ஏமாற்றுகிறார்

## என்பிபியின் கொழும்பு எம்.பி. சீற்றம்

அரசுத் தலைவர்களின் உரித்துரிமைகளை நீக்கும் சட்டத்துக்கு மக்கள் மத்தியில் நல்லதொரு வரவேற்பு உள்ளது. தனது தந்தை மஹிந்த ராஜபக்சவுக்காக பொதுமக்களை ஒன்றிணைக்கும் நாமல் ராஜபக்ச இந்த சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிக்கவில்லை. போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு தலைமை தாங்கிய மஹிந்த ராஜபக்ச நாடு வங்குரோத்து நிலையடைவதற்கும் தலைமை தாங்கினார் என்பதை நாட்டு மக்கள் மறக்க போவதில்லை என என்பிபியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞6

# முன்னாள் எம்.பிக்களின் ஓய்வூதியத்தை பறிப்பதற்கும் தயாராகிறது சட்ட வரைவு

அரசுத் தலைவர்களுக்குரிய சிறப்புரிமைகளை நீக்குவதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதேபோன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை நீக்குவதற்கான சட்ட வரைவு தயாரிக்கப்படுகிறது. யார் எதிர்ப்பு தெரிவித்தாலும் விரைவில் அதற்கான சட்டம் நிறைவேற்றப்படுமென சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பலப்பிட்டிய பிரதேசத்தில் தபாலகமொன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனைத்தெரிவித்தார். அவர்மேலும்தெரிவித்ததாவது:

பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கான கொள்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய தேசிய வரி வருமான திணைக்களம், மதுவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம் உள்ளிட்டவை தமக்கான இலக்கிற்கு அப்பால் இலாபமீட்டியுள்ளன. மறுபுறம் அநாவசிய செலவுகளை குறைத்திருக்கின்றோம். இவற்றின் ஊடாக வரவு, செலவு திட்டத்தின் இடைவெளியைப் படிப்படியாக சமநிலைப்படுத்த முயற்சிக்கின்றோம்.

உலகின் பல நாடுகள் பொருளாதார வளர்ச்சியைக் காண்பிக்க தவறியுள்ள போதிலும், இலங்கை அதனை செய்து காண்பித்துள்ளதாக உலக வங்கி பாராட்டு தெரிவித்துள்ளது. 2021, 2022, 2023ஆம் ☞6

# சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கு பேச்சைத் தாண்டி முயற்சி தேவை

## எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

காலநிலை மாற்றம் மனித இருப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்திருப்பதனால், உலகளாவிய நெருக்கடிகளைகூட்டாண்மைமற்றும் இருதரப்பு முயற்சிகள் மூலம் தீர்க்க வேண்டும். பேச்சுக்களைத் தாண்டி நடவடிக்கை எடுப்பதன் மூலம் ஒவ்வொரு நாடும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் தார்மீகப் பொறுப்பைக் கொண்டுள்ளதாகஎதிர்க்கட்சிதலைவர் சஜித்பிரேமதாசசுட்டிக்காட்டியுள்ளார்.

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை சவால்கள் குறித்த கொள்கைவகுத்தல் மற்றும் கூட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன் செயல்படும் நாடாளுமன்ற சுற்றுச்சூழல்ஒன்றியம்அண்மையில் கூடிய போதே எதிர்க்கட்சி தலைவர் இதனை தெரிவித்துள்ளார். தேசிய மற்றும் சர்வதேச ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

மகிந்த, மைத்திரி, கோட்டாபய, ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரேமதாசவின் மனைவி ஹேமா ஆகியோரின் சலுகை உரித்துக்களை நீக்கும் சட்டமூலத்தை தமிழ் அரசியல் கட்சிகள் ஏன் ஆதரிக்கவில்லை என்பதுதான். இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதையும் அதன் மூலம் மகிந்த ராஜபக்ச கொழும்பில் இருந்த அரச இல்லத்திலிருந்து வெளியேறியதையும் தமிழர்கள் சிலர் சமூக ஊடகங்களில் கொண்டாடினார்கள். இந்தப் பின்னணியில் தமிழ்க் கட்சிகளின் செயல் கடும் விமர்சனங்களுக்கு உள்ளாகியது.

என்பிபி ஆளும்தரப்புக் கொண்டு வந்த இந்தச் சட்டமூலம் 150 மேலதிக வாக்குகளின் ஆதரவுடன் நிறைவேறியது. ஆதரவாக 151 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் கிடைத்திருந்தன. தமிழ் அரசுக் கட்சி, அகில இலங்கைதமிழ்காங்கிரஸ், ஜனநாயகத்தமிழ்த் தேசிய முன்னணி ஆகியன வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. அதாவது இந்தத் தீர்மானத்திற்குத் தாங்கள் ஆதரவும் இல்லை எதிர்ப்பும் இல்லை என்கிற நிலைப்பாட்டை அவை வெளிப்படுத்தின. இந்தக் கட்சிகள் மட்டுமல்ல ஏனைய எதிர்க் கட்சிகளும்கூட வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. எதிர்க் கட்சிகளின் ஒரேயொரு உறுப்பினர் மட்டுமே எதிர்த்து வாக்களித்தார்.

ஆதரவு வாக்குகளில் ஒன்று யாழ். மாவட்டசுயேச்சைநாடாளுமன்றஉறுப்பினர் அருச்சுனாவினுடையது. அதன் பின்னர் தீர்மானத்திற்கு ஆதரவளிக்காத தமிழ்க் கட்சிகள் மீதான விமர்சனத்திற்குப் பஞ்சம் இருக்குமா சொல்லுங்கள்! சமூக ஊடகங்களில் கிழித்துத் தொங்கப்போடுகிறார்கள். அதற்குக் காரணம் இந்த முன்னாள் அரசுத்தலைவர்கள் எல்லோருமே ஏதோ ஒரு விதத்தில் தமிழர்கள் மீதான போரை முன்னின்று நடத்தியவர்கள். தமிழர்கள் பலரின் சாவுகளுக்கும் அழிவுகளுக்கும் காரணமானவர்கள். தமிழர்களை அரசியல் ரீதியாக ஒடுக்குவதற்குப் பெரும் பங்காற்றியவர்கள். அரசியல் தீர்வு ஒன்றைத் தடுத்தவர்கள். இதனால் ஏற்பட்ட தார்மீகக் கோபமே அவர்களின் அரசியல் சலுகைகள் பறிக்கப்பட்டபோது அதனைக் கொண்டாடும் மனோநிலைக்கு அவர்களைத் தள்ளியது. அத்தகையவர்களுக்கு தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கின்றது. தமிழ்க் கட்சிகள் துரோகமிழைத்துவிட்டதாக அவர்கள் கொந்தளிக்கிறார்கள்.

தமிழ்க்கட்சிகள்தரப்பிலோ, இந்தவிவகாரம் சிங்கள இறைமைக்கு உட்பட்டதொரு விடயம். சிங்கள மக்கள் தமது முன்னாள் அரசுத் தலைவர்களுக்குத்தாம்வழங்கியசலுகைகளை உரித்துக்களை மீளப் பெறுகிற விடயத்தில் தமிழர்களுக்கு என்ன வேலை என்பதால் அந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை என்று விளக்கமளிக்கிறார்கள். இதனாலும் அவர்கள் கடுமையான விமர்சனங்களைச் சந்திக்கிறார்கள். முன்னாள் அரசுத் தலைவர்களின் உரித்துக்கள் சலுகைகள் தமிழ் மக்களின் வரிப்பணத்திலிருந்துதான் பெறப்படுகின்றன என்பதால் இதனை வெறுமனே சிங்களவர்களின் விவகாரமாகப் பார்க்க முடியாது என்பது தமிழ்க் கட்சிகளை விமர்சிப்பவர்களின் கருத்தாக இருக்கின்றது.

விடயம் இத்தோடு சென்றிருந்தால் பரவாயில்லை. இந்த விடயத்தில் ஆளும்தரப்பின்தீர்மானத்தைஆதரிப்பதில்லை என்ற முடிவை, அதாவது வாக்கெடுப்பில் கலந்துகொள்வதில்லை என்ற முடிவை தமிழ் அரசுக் கட்சிக்குள் எடுத்தவர் அதன் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரனே என்பது இப்போது வெளியே வந்துள்ளது. தீவிர தமிழ்த் தேசியவாதியாகத் தன்னை அடையாளப்படுத்தி அதன் மூலமே தேர்தலில் வாக்குகளை அறுவடை செய்யும் சிறீதரன், தமிழர்கள் மீதான கொடூரங்களுக்குப் பொறுப்பான முன்னாள் அரசுத்தலைவர்களின் சலுகைகளைப் பறிக்கும் வாய்ப்புக் கிடைத்தபோது ஏன் அதனைத் தவிர்த்தார் என்பதுதான் இப்போது மீண்டும் கிளம்பியுள்ள சர்ச்சை.

ஆளும்தரப்பின் தீர்மானத்தை ஆதரிப்பதில்லை என்ற முடிவை சிறீதரனே கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்தார் என்பதையும் அதற்கு முன்பாக கட்சியின் நாடாளுமன்றக் குழு கூடி இது தொடர்பில் ஆராயவில்லை என்றும் ஒருசில உறுப்பினர்கள் தமக்கிடையில் பேசிவிட்டு தீர்மானத்தை ஆதரிப்பதில்லை என்பதே முடிவு என்று சிறீதரன் அறிவித்தார் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்திருக்கிறார்.

கட்சிக்குள் அடுத்த சர்ச்சைக்கு இந்த விவகாரம் அடித்தளம் இட்டிருக்கிறது. அதிலும் தமிழ்த் தேசியவாதியாகத் தன்னை அடையாளப்படுத்தும் சிறீதரன் இப்போது அதற்குள் சிக்கிக் கொண்டுள்ளார். ஒருவேளை சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து இந்த முடிவு எடுக்கப்பட்டிருந்தால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்திலேயே கூட இந்த முடிவு எடுக்கப்பட்டிருந்தாலும், சுமந்திரன் ரணிலின் ஆள், சந்திரிக்காவின் ஆள் அதனால்தான் அவர் இந்த முடிவை எடுத்தார் என்று பிய்த்து உதறியிருப்பார்கள். சிறீதரனே கூட அதைச் சொல்லியிருப்பார். இப்போது இந்த விவகாரம் தனக்கெதிராக இப்படித் திரும்பும் என்று அவரும் எதிர்பார்த்திருக்கமாட்டார். ஆனாலும் அது விவகாரமாகிவிட்டது.

கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் இன்று அம்பாறை மாவட்டத்தில் நடக்கவுள்ளது. ஆலையடிவேம்பில் நடக்கும் இந்தக் கூட்டத்தில் இந்த விவகாரம் காரசாரமான விவாதத்தைக் கிளப்பும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. நாடாளுமன்றத்தில் முக்கியமான விடயங்களில் கட்சித் தலைமையின் வழிகாட்டலுடனேயே முடிவுகள் எடுக்கப்படவேண்டும் என்று ஏற்கனவே ஒரு இணக்கம் மத்திய செயற்குழுவில் எட்டப்பட்டுள்ளது. அரசமைப்புக் குழுவிலும் சிறீதரன் ஏற்கனவே எடுத்த சில நிலைப்பாடுகள் பொருத்தமற்றவை என்ற நிலைப்பாடு கட்சிக்குள் ஏற்பட்டதன் விளைவாக இந்த இணக்கம் எட்டப்பட்டிருந்தது. ஆனால், இப்போது அது மீண்டும் மீறப்பட்டுள்ளதால், இன்றைய கூட்டத்தில் இது காரசாரமாக விவாதிக்கப்படும் என்று தெரிகிறது.

முன்னாள் அரசுத் தலைவர்களில் மகிந்த, கோட்டாபய, ரணில் என்று முக்கியமானவர்களை எல்லாம் தோற்கடிப்பதற்கு தமிழ் அரசுக் கட்சி முக்கியமாகப் பணியாற்றியிருக்கும் நிலையில், அவர்களின் உரித்துக்களைப் பறிக்கும் விடயத்தில் மட்டும், அது சிங்கள மக்களின் விவகாரம் அதில் எமக்குச் சம்பந்தம் இல்லை என்று ஒதுங்கிவிட முடியுமா என்ற ரீதியில் சர்ச்சைகள் எழுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றன. கட்சித் தலைமையை ன் கட்டுக்கோப்பில் இல்லாமல் நாடாளுமன்றக் குழு 'குறுக்கு சால்' ஓட்ட முயல்வதாக ஏற்கனவே குமுறிக் கொண்டிருப்பவர்கள் இந்த விவகாரத்தை முன்வைத்து ஒரு பிடிபிடிப்பார்கள். .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## முடிவு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலத்தை தமிழ்க் கட்சிகள் ஆதரித்திருக்க வேண்டும் என்ற கடுமையான விமர்சனங்கள் சமூக ஊடகங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனிடம் செய்தியாளர்கள் நேற்றுக் கேள்வி எழுப்பினர். அதற்குப் பதிலளிக்கும்போதே அந்த முடிவை தமது நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரனே அறிவித்தார் என்றும் அது தொடர்பில் நாடாளுமன்றக் கூட்டத்தில் எதுவும் ஆராயப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரசுத் தலைவர்களிற்காகச் செலவிடப்படும் தேவையற்ற செலவுகளைக் குறைப்பதற்கான சட்டமூலத்தை மக்கள் நலன் சார்ந்ததாகத்தான் ஆளும்தரப்பு கொண்டு வந்தது. அதனை நானும் மக்கள் நலன் சார்ந்த விடயமாகவே பார்க்கின்றேன். ஏனென்றால் மக்களுடைய வரிப் பணத்தை அநியாயமாக இவ்வாறு முன்னாள் அரசுத் தலைவர்களின் செலவுகளுக்குப் பயன்படுத்துவது அநியாயம். நாங்கள் அந்தச் சட்டமூலத்தை ஆதரித்து, முன்னாள் அரசுத் தலைவர்களின் சலுகைகளை இல்லாமல் செய்வதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் ஆதரவு என்கின்ற செய்தியைச் சொல்லி இருக்கவேண்டும் என்பதே எனது தனிப்பட்ட நிலைப்பாடு.

அன்றைய தினம் நான் நாடாளுமன்றத்திற்கு மூன்றுமணி அளவில் வந்திருந்தேன். நான் அந்த சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களிக்கவேண்டும் என்றேவந்திருந்தேன். நான் வந்தபோது எமது கட்சியினுடைய நாடாளுமன்றக் குழுத் தலைவர் (கொரோடா) சிறீதரன் இந்தச் சட்டமூலத்தை எதிர்த்தோ, ஆதரித்தோ எமது கட்சி வாக்களிக்கப் போவதில்லை என்று அறிவித்தார். அதாவது நமது நாடாளுமன்றக் குழு அன்றைய தினம் காலையில் கூடி ஒரு இந்த முடிவை முடிவு எடுத்ததாக அவர் தெரிவித்திருந்தார்.

அவர் அவ்வாறு கூறிய பின்னர், நான் அதனை மீறி கட்சியினுடைய உறுப்பினர் என்கின்ற அடிப்படையில் அந்த வாக்கெடுப்பில் கலந்துகொள்ள முடியாது. இருந்தபோதிலும் நாடாளுமன்றக் குழு கூடியதாகத் தெரியவில்லை. நாடாளுமன்றக் குழு கூடுவதாக இருந்தால் எங்களுக்கு என்று தனியான புலனக் (வட்ஸ்அப்) குழு இருக்கிறது. அந்தக் குழுவில் அறிவித்திருப்பார்கள். வழக்கமாக கூட்டம் என்றால் கொரோடா அந்தக் குழுவில் ஒரு செய்தியை அனுப்புவார். நாடாளுமன்றக் குழுக் கூட்டம் இருப்பதாகக் கூறுவர். ஆனால் அன்றைய தினம் இவ்வாறு ஒரு செய்தியும் வரவில்லை. இது தொடர்பாக தீர்மானம் எடுக்க போவதாகவும் எனக்கு தெரியாது. வாக்களிக்க வந்த எனக்கும் வாக்களிக்க கூடிய சந்தர்ப்பம் ஏற்படவில்லை. இந்த விடயம் தொடர்பாக எமது நாடாளுமன்றக் குழுத் தலைவர் அவர்கள் நிச்சயமாக ஊடகங்களுக்குப் பதில் கருத்து கூறவேண்டிய தேவை இருக்கின்றது.

நாங்கள் 2020ஆம் ஆண்டும் நாடாளுமன்றத்தில் மக்கள் நலன் சார்ந்த விடயங்கள் வருகின்றபோது ஆளும்தரப்புக்கு ஆதரவாக வாக்களித்து இருக்கின்றோம். குறிப்பாக தமிழ் இனப் பிரச்சினைகள், அரசமைப்புத் தொடர்பான பிரச்சினைகள் வருகின்றபோது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாக ஒரு முடிவு எடுத்துச் செயற்பட்டிருக்கின்றோம். அதாவது மக்கள் நலன் சார்ந்த விடயங்கள் என்பதனையும் தாண்டி எமது கொள்கைகள் அடிப்படையில் சில விடயங்களில் நாங்கள் வாக்களிக்காமல் இருப்பதும் வழமை. அதனால் நாடாளுமன்றக் குழுவில் பேசி முன்னாள் அரசுத்தலைவர்களின் உரித்து குறித்த சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களிப்பதில்லை என்று எனக்குச் சொன்னதன் கட்சி முடிவை ஏற்பதுதான் நான் செய்யக்கூடியது.

நான் தனி ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகச் சட்டமூலத்தை ஆதரித்து வாக்களித்து இருந்தால் கட்சி தீர்மானத்தை மீறி-ம் ஒரு செயல்பாடாக இருந்திருக்கும். அதனாலேயே நானும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. இந்தப் பிழையான தீர்மானத்திற்காக, எங்களுக்கு வாக்களித்த மக்களிடம் நான் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நிச்சயமாக அந்தச் சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்து இருக்கவேண்டும். இது ஆளும்தரப்பிற்குச் சார்பான சட்டமூலம் அல்ல. மக்களுக்குச் சார்பான சட்டமூலம் என்கின்ற வகையில் அதனை ஆதரிக்கவேண்டும்.

நான் எப்போதும் கட்சித் தீர்மானங்களுக்கு கட்டுப்படுகின்ற ஒருவன். அரசுத் தலைவர் தேர்தலில் கட்சி என்ன தீர்மானம் எடுக்கின்றது என்று பார்த்து அதற்கும் கட்டுப்படுவேன். அதே நேரத்தில் நாடாளுமன்றத் தேர்தலை கையாளுவது சம்பந்தமாக எங்களுடைய கட்சி முடிவெடுத்தால் அதற்கும் நான் கட்டுப்படுவேன். உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக ஒரு தீர்மானம் எடுத்தால் அதற்கும் நான் கட்டுப்படுவேன். அதேபோன்றுதான் இந்த வாக்கெடுப்புச் சம்பந்தமான விடயத்திலும் எங்களுக்கு கட்சியினுடைய கொறடாவின் தீர்மானத்திற்கு நான் கட்டுப்பட்டு இருக்கின்றேன்.

எமது கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓரிருவர் - இந்தச் சட்ட மூலத்தை எமது கட்சி ஆதரிக்க வேண்டும் என்று கொறடாவிடம் பேசினர் என நான் பின்னர் அறிந்தேன். அதாவது மக்கள் நலன் சார்ந்த விடயங்களுக்கு ஆதரவாக நாங்கள் வாக்களிக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டினர் என்று தெரியவந்தது. நாடாளுமன்றக் கூட்டமாக நடந்திருந்தால் இந்த விடயங்கள் எனக்குத் தெரியவந்திருக்கும். அது கூட்டமாக நடைபெறாததனால் அந்த விடயங்கள் எனக்கு தெரியாது. அது அறிவிக்கப்படவும் இல்லை. அதனால்தான் சொல்லுகின்றேன். ஊடகத்தில் இந்த கேள்வியை கேட்டதனால்தான் நான் இந்தப் பதிலைச் சொல்ல வேண்டிய நிலைப்பாட்டுக்குத் தள்ளப்பட்டிருக்கின்றேன்.

இது உள் கட்சி விவகாரம். அதற்காக அதனை நான் பேசாமல் போகவும் முடியாது. எதிர்காலத்தில் ஊழல் ஒழிப்பு சம்பந்தமாக இவ்வாறான வாக்கெடுப்புகள் வந்தால் இலங்கைத் தமிழர் கட்சியினுடைய தீர்மானமே என்னுடைய தீர்மானமாக அமையும். எனவே இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் இலங்கைத் தமிழ் அரசு கட்சியாக தீர்மானம் எடுக்க வேண்டிய தேவை எதிர்காலத்தில் இருக்கின்றது போல் தெரிகின்றது. நாடாளுமன்றக் குழுவாக மாத்திரம் எடுக்காமல் கட்சியாக எடுக்கவேண்டும் என நினைக்கின்றேன். முன்னாள் அரசுத் தலைவர்கள் உரித்து நீக்கச் சட்டமூலம் தொடர்பிலும் கட்சி என்கின்ற ரீதியில் நாங்கள் பேசித் தீர்மானம் எடுத்திருந்தால் சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களிக்கக்கூடிய சூழல் வந்திருக்கும். எனவே கட்சி என்கின்ற அடிப்படையில் எதிர்காலங்களில் இவ்வாறான விடயங்களுக்கு நாங்கள் ஆதரவாக - நிச்சயமாக வாக்களிப்பதற்கு - நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

## சுற்றுச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபுணர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளின் பங்கேற்புடன் இந்தக் கூட்டம் அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

சமுதாயபசுமை எரிசக்தி வலங்களுக்கான முன்முயற்சி மூலம் நிலையான அபிவிருத்தி, வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் பசுமை எரிசக்தி விரிவாக்கத்திற்கு ஓர் ஊக்கியாக செயல்படும். புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஊக்குவிக்கும், பல்லுயிரியலைப் பாதுகாக்கும் மற்றும் எதிர்கால சந்ததியினரைப் பாதுகாக்கும் கொள்கைகளுக்கு ஆதரவை நல்குமாறு இதில் பங்குபற்றியோரிடம் எதிர்க்கட்சி தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## ட்ரம்பின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படும் சீருடைகள், வருடாந்திர சுற்றுலாக்கள், வருடாந்திர விளையாட்டு நிகழ்வுகள், பருவகால இறுதி நட்புக் கூட்டங்கள் மற்றும் ஆண்டின் ஜனவரி 1 ஒவ்வொரு ஊழியருக்கும் வழங்கப்படும் பரிசு உள்ளிட்ட நலத்திட்டங்கள் நிறுவனத்தினால் குறைக்கப்பட்டுள்ளதாகப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்க வரி காரணமாக அமெரிக்க சந்தைக்கு அனுப்பப்படும் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும், இது விற்பனையைக் குறைக்கும், இதன் விளைவாக, தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டியிருக்கும் என்று போராட்டக்காரர்களிடம் உரையாற்றிய சுதந்திர வர்த்தக வலயங்கள் மற்றும் பொது ஊழியர் சங்கத்தின் செயலாளர் அன்டன் மார்க்கஸ் கூறினார்.

அமெரிக்க வரிக் கொள்கையால் இலங்கையில் ஆடைத் துறையில் சுமார் 16,000 வேலை இழப்பு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாகவும் அன்டன் மார்க்கஸ் கூறினார். இந்தத் துறையில் பல ஆய்வுகளை மேற்கொண்ட ஆராய்ச்சியாளர்கள் தன்னிடம் இதனைக் கூறியுள்ளனர் என்றார் அவர்.

அமெரிக்க வரியைப் பற்றி விவாதிக்க ஆளும்தரப்பிடம் தமது தொழிற்சங்கம் ஒரு வாய்ப்பைக் கோரிய போதிலும், இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க தொழிற்சங்கங்களை அழைக்காமல் ஆளும்தரப்பு முதலாளிகளுடன் இதைப் பற்றி விவாதித்ததாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கட்டுநாயக்கசுதந்திர வர்த்தகவலயத்தைச் சேர்ந்த சுமார் 500 ஊழியர்கள் நேற்றைய போராட்டத்தில் பங்கேற்றனர்.

## ஒன்றரை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் கெஹலியவின் தனிப்பட்ட செயலாளராகப் பணியாற்றிய காலத்திலேயே அவர் இவ்வளவு சொத்துக்களையும் குவித்துள்ளார். கொழும்பு பெருநகரப் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் வீடுகள், ஆடம்பரமான நவீன கார்கள், அவரது மற்றும் அவரது மனைவியின் பெயர்களில் வங்கிக் கணக்குகளில் நிலையான வைப்புகள் என்று இந்த ரூ.270 மில்லியனுக்கும் அதிகமான தொகை சொத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதற்கான பணம் அவருக்கு எங்கிருந்து கிடைத்தது என்பதை அவரால் நிரூபிக்க முடியவில்லை என்று லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு கூறுகின்றது.

பிரதிவாதியான ரமித் ரம்புக்வெல்ல, ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் செய்ததாகக் கூறி, லஞ்ச ஒழிப்பு ஆணையம் இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளது.

# இலங்கை - பிலிப்பைன்ஸ் இடையிலான 3ஆம் சுற்று ஆலோசனை நேற்று நிறைவு

இலங்கைக்கும் பிலிப்பைன்ஸ் குடியரசுக்கும் இடையிலான மூன்றாவது சுற்று அரசியல் ஆலோசனைகள் நேற்று முன்தினம் கொழும்பில் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த ஆலோசனைகள் உரையாடலில் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜா, இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் நெருக்கமான நட்புறவை விரிவுபடுத்தி வலுப்படுத்த வேண்டும் என்று தெரிவித்தார். குறிப்பாக 2026ஆம் ஆண்டில் நடைபெறும் இராஜதந்திர உறவுகளின் 65ஆவது ஆண்டு நிறைவைக் கருத்தில் கொண்டு கொழும்பில் பிலிப்பைன்ஸின் வதிவிடத் தூதரகத்தை மீண்டும் திறப்பது குறித்து பிலிப்பைன்ஸ் பரிசீலிக்கும் என எதிர்பார்க்கிறார் என்றும் ஆசியானின் எதிர்வரும் தலைமைப் பொறுப்பை பிலிப்பைன்ஸ் ஏற்கும்போது, இலங்கை அதனுடன் நெருக்கமாக பணியாற்ற ஆவலுடன் இருக்கிறார் என்றும் தெரிவித்தார்.

இருதரப்பு உறவுகளின் நிலையை மீளாய்வு செய்வதற்கும், பல துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வழிகளை ஆராய்வதற்கும் இந்தச் சந்திப்பு பயனுறுதிமிக்க வாய்ப்பொன்றை வழங்கியது. வர்த்தகம், முதலீடு, தொழிலாளர், பாதுகாப்பு, காவற்துறை, விவசாயம், மீன்வளம், கலாச்சாரம், கல்வி மற்றும் அரசியல் மற்றும் இராஜதந்திர பரிமாற்றங்கள் உள்ளிட்ட பரஸ்பர ஆர்வமுள்ள இருதரப்பு, பிராந்திய மற்றும் பல்தரப்பு பிரச்சினைகள் குறித்து இரு தரப்பினரும் ஆக்கபூர்வமான உரையாடல்களில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தொழில்நுட்பப் பரிமாற்றம், நீர்ப்பாசனம், உணவுப் பாதுகாப்பு மற்றும் அரிசி ஆராய்ச்சி ஆகியவற்றில் ஒத்துழைப்புடன், தேங்காய் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில்களில் சிறப்பு கவனம் செலுத்தி விவசாயத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு ஆகியவை ஆழமான ஈடுபாட்டிற்கான பகுதிகளாக அடையாளம் காணப்பட்டதுடன், பிலிப்பைன்ஸின் மேம்பட்ட நிபுணத்துவத்திலிருந்து, குறிப்பாக 'பால்மீன்' இனப்பெருக்க தொழில்நுட்பத்தில் கற்றுக்கொள்ளும் வாய்ப்பை இலங்கை வரவேற்றது.

இரு தரப்பினரும் தொழிலாளர் துறை ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினர், இலங்கை இடம்பெயர்வு நிர்வாகத்தில் பிலிப்பைன்ஸின் உலகளாவிய தலைமையை அங்கீகரித்தது. தொழிலாளர் ஒத்துழைப்பு குறித்த வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முன்கூட்டியே முடிப்பதற்கான அவசியத்தையும், புறப்படுவதற்கு முந்தைய ஆயத்தம், ஒழுங்குபடுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பணியமர்த்தல் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலன் குறித்த அறிவுப் பகிர்வு ஆகியவற்றின் அவசியத்தையும் விவாதங்கள் எடுத்துரைத்தன. குறிப்பாக பிலிப்பைன்ஸின் தொழில்நுட்பக் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டு ஆணையகத்துடன் கூட்டாண்மைகள் மூலம் கல்வி மற்றும் தொழில்நுட்ப பயிற்சியில் ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகளும் வரவேற்கப்பட்டன.

இலங்கையின் ஏற்றுமதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பிலிப்பைன்ஸின் சர்வதேச வர்த்தக கண்காட்சிகள் மற்றும் பணிகள் மையம் ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பு மூலம், குறிப்பாக வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்பை மேம்படுத்த இரு நாடுகளும் தயாராக இருப்பதாகத் தெரிவித்தன.

2026ஆம் ஆண்டில் இராஜதந்திர உறவுகளின் 65ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூட்டு தபால் தலைகளை வெளியிடுதல், கொழும்பில் உலகப் புகழ்பெற்ற பிலிப்பைன்ஸ் சோப்ரானோ இரட்டையர்களான தி நைட்டிங்கேல்ஸ் மற்றும் திரு. பிரை சிமாஃப்ராங்காவின் இசை நிகழ்ச்சி, கொழும்பில் ஒரு திரைப்பட விழா மற்றும் பிலிப்பைன்ஸ் சமையல் இரவு உள்ளிட்ட பல முயற்சிகளுடன் கொண்டாட ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் அடுத்த சுற்று அரசியல் ஆலோசனைகள் 2026ஆம் ஆண்டில் மணிலாவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# லஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அடுத்தாண்டு நிதி மதிப்பீட்டுக்கு அனுமதி

*இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவிற்கான 2026 ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத் திட்ட மதிப்பீட்டுக்கு அரச நிதி பற்றிய தெரிவுக்குழு அனுமதி வழங்கியுள்ளது.*

*அரச நிதி பற்றிய குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தலைமையில் குழு வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் கூடியது.*

*இதன்போது கருத்து தெரிவித்த குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா, இலங்கை மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள நிதி சுயாதீனத்தை இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழுவுக்கும், தேசிய கணக்காய்வு திணைக்களத்துக்கும் வழங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.*

*மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவரின் கொடுப்பனவுகள் திருத்தம் செய்யப்படுவதை போன்று இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மற்றும் தேசிய கணக்காய்வு திணைக்களத்தின் அதிகாரிகளின் கொடுப்பனவும் திருத்தம் செய்யப்பட வேண்டும் எனவும் குழுவின் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.*




# 2026 பாடசாலை நாட்காட்டி கல்வி அமைச்சால் அறிவிப்பு

2026ஆம் ஆண்டுக்கான பாடசாலை நாட்காட்டியை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதில் முஸ்லிம் பாடசாலைகளுக்கான தவணைத்திகதிகளும் குறிப்பிடப்பிட்டுள்ளன. அதற்கமைய புதிய ஆண்டின் முதல் தவணை 2026 ஜனவரி 1 தொடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளில் 2026 ஜனவரி 1 முதலாம் தவணையின் முதற்கட்ட கல்விச் செயற்பாடுகள் தொடங்கி பெப்ரவரி 13 வரை இடம்பெறவுள்ளன. பெப்ரவரி 14 முதல் மார்ச் 2 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது. முதலாம் தவணையின் இரண்டாம் கட்டம் மார்ச் 3 முதல் ஏப்ரல் 10 வரை இடம்பெறவுள்ளது. ஏப்ரல் 11 முதல் ஏப்ரல் 19 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இரண்டாம் தவணை ஏப்ரல் 20 தொடங்கி ஜூலை 24 நிறைவடையவுள்ளது. மூன்றாம் தவணையின் முதற்கட்டம் ஜூலை 27 முதல் ஓகஸ்ட் 7 வரை இடம்பெறவுள்ளது. ஓகஸ்ட் 8 முதல் செப்டெம்பர் 6 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது. மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் செப்டெம்பர் 7 முதல் டிசெம்பர் 4 வரை இடம்பெறவுள்ளது.

முஸ்லிம் பாடசாலைகளில் முதலாம் தவணையின் கல்வி செயற்பாட்டு முதற்கட்டம் ஜனவரி 1 முதல் பெப்ரவரி 13 வரை இடம்பெறவுள்ளது. பெப்ரவரி 14 முதல் மார்ச் 22 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது. மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் மார்ச் 23 முதல் ஏப்ரல் 10 வரை இடம்பெறவுள்ளது. ஏப்ரல் 11 முதல் 19 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

முதலாம் தவணையின் மூன்றாம் கட்டம் ஏப்ரல் 20 தொடங்கி 30 நிறைவடையவுள்ளது. மே 1 முதல் 3 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது. இரண்டாம் தவணையின் முதலாம் கட்டம் மே 4 முதல் 26 வரை இடம்பெறவுள்ளது. மே 27 முதல் 31 வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது. இரண்டாம் தவணையின் இரண்டாம் கட்டம் ஜூன் 1 முதல் ஜூலை 31 வரை இடம்பெறவுள்ளது.

மூன்றாம் தவணையின் முதலாம் கட்டம் ஓகஸ்ட் 3 தொடங்கி செப்டெம்பர் 2 வரை இடம்பெறவுள்ளது. செப்டெம்பர் 3 முதல் 6 வரை விடு;முறை வழங்கப்படவுள்ளது. மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் செப்டெம்பர் 7 தொடங்கி டிசெம்பர் 4 வரை இடம்பெறவுள்ளது.

1997ஆம் ஆண்டு ஓகஸ்ட் 8 கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய வருடத்துக்கு 210 நாட்கள் கல்விச் செயற்பாடுகள் இடம்பெற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் பரீட்சைகள் இடம்பெறும் காலப்பகுதியில் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது. எனவே 2026ஆம் ஆண்டு 197 நாட்கள் கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குத் திட்டமிட்டுள்ளதாக கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2026ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகளை ஓகஸ்ட்டிலும், 2026ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தர பரீட்சைகளை டிசெம்பரிலும் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. அத்தோடு 2025ஆம் ஆண்டுக்கான சாதாரண தர பரீட்சைகள் 2026 பெப்ரவரியில் நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு சுயாதீனம் பெறவேண்டிய அவசரம்

**இலங்கை சமூகத்தில் நீண்டகாலமாகவே லஞ்சம் மற்றும் ஊழல் என்ற இரட்டை நஞ்சுகள் வேரூன்றி விட்டன. அரசுத் துறைகளில் இருந்து அரசியல்வரை, சிறு நடவழக்கையிலிருந்து மிகப் பெரிய ஒப்பந்தங்கள்வரை, இந்த ஊழல் வலையமைப்பு பரவலாகச் செயல்பட்டு வருகிறது. இந்த சூழலில், லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மிக முக்கியமான பங்கினை வகிக்க வேண்டிய அமைப்பாகும். ஆனால் அண்மையில், இவ்வாணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திசாநாயக்க அவர்கள் நாடாளுமன்ற நிதிக்குழுவின் முன் வெளிப்படுத்திய கருத்துகள், இந்த அமைப்பு சட்டரீதியான பலவீனங்களாலும் நிர்வாகத் தடைகளாலும் கட்டுண்டு நிற்கின்றதை வெளிச்சமிட்டு காட்டுகின்றன.**

**திசாநாயக்க அவர்கள் கூறியபடி, தற்போதைய சட்டங்களில் உள்ள பிழைகள் காரணமாகவே ஆணைக்குழுவின் சுயாதீனம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக ஆணைக்குழு சட்டம் மற்றும் நிதி மேலாண்மை சட்டம் ஆகிய இரண்டுக்கிடையேயான முரண்பாடுகள், அதிகாரிகள் சுயாதீனமாகச் செயல்படுவதை தடுக்கின்றன. ஆணைக்குழுவில் காவல்துறை அதிகாரிகளும் பிற அரசு அலுவலர்களும் பணியாற்ற முடியாத நிலை உருவாகியுள்ளது. சட்டத்தின் தெளிவின்மையும், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உள்ள சட்ட உரைகளின் முரண்பாடுகளும், நடைமுறையில் பெரும் தடைகளை ஏற்படுத்துகின்றன.**

**இன்று ஊழலைச் சமாளிக்க வேண்டிய அதிகாரிகளே சட்ட சிக்கல்களில் சிக்கிக் கொண்டு செயலிழந்துவிடுகின்றனர். ஒரு சிறிய அளவிலான லஞ்ச வழக்கை விசாரிக்க யாழ்ப்பாணம் அல்லது பிற தொலைதூர மாவட்டங்களுக்கு செல்ல, 20,000 ரூபாவுக்கும் மேல் செலவிட வேண்டியதாகத் திசாநாயக்க அவர்கள் கூறியிருப்பது, இந்த அமைப்பின் நிலையை வெளிப்படுத்தும் மிகத் துயரமான உதாரணம். சிறு வழக்குகளுக்கே இவ்வளவு சிரமம் ஏற்பட்டால், பெரும் ஊழல் வலையமைப்புகளை முறியடிப்பது எப்படிச் சாத்தியமாகும்?**

**மாவட்ட மட்டத்தில் அலுவலகங்களை நிறுவுதல் என்ற யோசனை மிகவும் தேவையானதாகும். அப்படிச் செய்தால், விசாரணைகள் மையமாகக் கொழும்பில் மட்டுமே நடைபெற வேண்டிய அவசியம் இல்லாமல், மக்களுக்கு அருகிலேயே நீதி கிடைக்கும். மேலும், வழக்குகளுக்காக சாட்சிகள் எல்லோரும் கொழும்பிற்கு வர வேண்டிய சுமையும் குறையும்.**

**மிகவும் கவலைக்குரியது என்னவெனில், 2023 முதல் ஆணைக்குழுவுக்கு நிலையான பணியாளர்கள்கூட வழங்கப்படவில்லை என்பது. நாடாளுமன்றத் தீர்மானங்களின் காரணமாக பணியாளர்களை நியமிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், அதிகாரிகள் சட்டவிரோத சூழலில் பணியாற்றும் நிலை உருவாகியுள்ளது. தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்கள் எப்போது விலகிச் செல்லுவார்கள் என்ற அச்சத்தில் ஆணைக்குழு தளர்வாகவே செயல்படுகிறது.**

**இலங்கையில் ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழு சுயாதீனமாக இயங்காவிட்டால், எந்த ஆளும்தரப்பாலும் இலஞ்சம். ஊழலை கட்டுப்படுத்த முடியாது. சட்டப்பிழைகள் திருத்தப்படவேண்டும். ஆணைக்குழுவின் சுயாதீனத்தை உறுதி செய்வதற்காக அரசியல் தலையீடுகள் நீக்கப்பட வேண்டும். புதிய சட்டங்கள் மூலம் மாவட்ட அலுவலகங்கள் தொடங்கப்பட்டு, போதுமான பணியாளர்கள் நியமிக்கப்படவேண்டும். மேலும், நீதித்துறை மையப்படுத்தலைக் குறைத்து, மாவட்ட மட்டத்தில் நீதித்துறை அதிகாரம் வழங்கப்பட வேண்டும்.**

**வளர்ந்த நாடுகளில் ஊழலைத் தடுக்க சுயாதீன அமைப்புகளுக்கு அரசுகள் முழு ஆதரவை அளிப்பதோடு, அரசியல்வாதிகளும் அந்த அமைப்புகளை மதிப்பது வழக்கம். ஆனால் நமது நாட்டில், அரசியல் தலையீடு, சட்ட முரண்பாடுகள், நிர்வாகத் தடைகள் ஆகியவற்றால் ஆணைக்குழுவின் பணி பாதிக்கப்பட்டுள்ளது.**

**இலங்கையின் முன்னேற்றத்திற்கான அடிப்படை நிபந்தனை சுத்தமான நிர்வாகமும் நம்பகமான நீதியும் ஆகும். அதை உறுதிப்படுத்துவதற்கு, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் சுயாதீனம் கட்டாயம் வலுப்படுத்தப்படவேண்டும். இல்லையெனில், 'ஊழல் ஒழிப்போம்' என்ற அரசியல் கோஷங்கள் காகிதத்தில் மட்டுமே நிற்கும் அபாயம் அதிகரிக்கும்.**

## வெலிகம பிரதேச சபைத் தவிசாளரை கைது செய்ய பிடியாணை பிறப்பிப்பு

*வெலிகம பிரதேச சபைத் தவிசாளர் லசந்த விக்ரமசேகரவை கைது செய்ய மாத்தறை பிரதான நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.*

*மாத்தறை தலைமை நீதிவான் சதுர திசாநாயக்க முன்னிலையில் வெள்ளிக்கிழமை இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.*

*தேசிய மக்கள் சக்தி பிரதேச சபை உறுப்பினர் சட்டத்தரணி தாரக நாணயக்காரவுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்தார் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் ஆஜராக தவறியமையினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது தேசிய மக்கள் சக்தி கட்சியில் இருந்து வெலிகம பிரதேச சபைக்குப் போட்டியிட்ட சட்டத்தரணி தாரக நாணயக்காரவை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் பாதிக்கப்பட்டவர்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.*

*மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, குற்றம் சாட்டப்பட்ட வெலிகம பிரதேச சபைத் தவிசாளர் லசந்த விக்ரமசேகர முற்படாத நிலையில் அவர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி தமது கட்சிக்காரர் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாகக் குறிப்பிட்டார்.*

*எவ்வாறாயினும் பிரதிவாதியின் பிணையாளர்கள் நீதிமன்றில் முற்படத் தவறியதால், இந்தப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 6 மாதங்களில் ரூ. 18 பில்லியன் லாபம்

*இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இவ்வாண்டின் முதல் 6 மாதங்களில் 18 பில்லியன் ரூபா இலாபமீட்டியுள்ளதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமார தெரிவித்துள்ளார். இந்த இலாபம் பெற்றோலியத் துறையை மேலும் மேம்படுத்துவதற்கான பல திட்டங்களைத் தொடங்குவதற்குப் பயன்படுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*அத்துடன், எரிபொருள் விநியோகத்தை மேம்படுத்தவும், விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கும், முத்துராஜவெல முனையத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு விமான எரிபொருள் குழாய் அமைக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*சர்வதேச எரிபொருள் விலைகளின் உறுதித்தன்மை மற்றும் உள்நாட்டு சந்தையில் மேற்கொள்ளப்பட்ட விலை சூத்திர கொள்கை சீர்திருத்தங்கள் ஆகியவற்றின் விளைவாக இவ்வாறு இலாபமீட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, 2024 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் புதிய போட்டியாளர்களின் வருகை மற்றும் சர்வதேச சந்தை விலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வருவாய் மற்றும் இலாபங்கள் குறைந்திருந்தன.*

*அந்த சந்தர்ப்பத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் இலாபம் 68.7 சதவீதமாகக் குறைந்து 13.6 பில்லியன் ரூபாவாகக் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இவ்வாண்டின் முதல் அரையாண்டில் ஈட்டப்பட்டுள்ள இந்த இலாபம், மீண்டும் லாபகரமான பாதையில் செல்வதற்கான அறிகுறியாகப் பார்க்கப்படுகின்றது*

## கட்டார் மீதான தாக்குதல் குறித்த கவலையைப் பகிர்ந்த இலங்கை

*அயலுறவுத்துறை பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, கட்டாரின் அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் சுல்தான் பின் சாத் பின் சுல்தான் அல் முரைக்கியுடன் நேற்று இலங்கை நேரப்படி முற்பகல் 11.30 மணியளவில் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.*

*இதன் போது வெளிவிவகாரப் பிரதி அமைச்சர், கட்டாரின் மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் குறித்து இலங்கையின் கவலைகளைத் தெரிவித்ததுடன், கட்டார் அரசுக்கும் மக்களுக்கும் இலங்கை மக்களின் ஆதரவையும் ஒற்றுமையையும் வெளிப்படுத்தினார் என்று அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.*

*கட்டார் தலைநகர் டோஹாவில், ஹமாஸ் அமைப்பின் முக்கிய தலைவர்களைக் குறிவைத்து இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களை நடத்தியது. இந்தத் தாக்குதலில் ஹமாஸின் தோஹா அலுவலகத் தலைவர் கலீல் அல்ஹையா உட்பட பல தலைவர்கள் இலக்கு வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.*

*இந்தத் தாக்குதல் காசாவில் போர்நிறுத்தப் பேச்சுக்களுக்கு நடுவுநிலைத செய்து வந்த கட்டாரின் பங்களிப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. இந்நிலையிலேயே இலங்கை தனது கரிசணையை வெளிப்படுத்தியுள்ளது.*

*மேலும் கட்டாரில் சமநிலையற்ற தன்மையை மேலும் அதிகரிக்கவும், பிராந்திய பாதுகாப்பை குறைமதிப்பிற்கு உட்படுத்தவும் வழிவகுக்கும், சமீபத்திய தாக்குதல்கள் குறித்து, இலங்கை ஆழ்ந்த கவலை தெரிவிப்பதாக வெளிவிவகார அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது.*

*குறித்த அறிக்கையில் உலகளாவிய ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச விதிமுறைகள் மற்றும் சட்டங்களை நிலைநிறுத்தி, பிராந்தியத்தில் அமைதி மற்றும் உறுதித்தன்மையை நோக்கி இராஜதந்திர உரையாடலில் ஈடுபடுவதிலும், நிதானத்தைக் கடைப்பிடிப்பதிலும், அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தை இலங்கை வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

காலைக்கதிர் Kalaikkathir

# இலங்கை அரசுத் தலைவர்களை அவர்களின் பதவிக் காலத்தின் பின்னரும் காக்கவேண்டும்

## ஐ.தே.க. தவிசாளர் தெரிவிப்பு

சுதந்திரத்துக்கு பின்னரான இலங்கை அரசியல் வரலாற்றில் சகல ஆளும், எதிர்க்கட்சி தலைவர்களும் அகாலச் சாவடைந்தவர்களாக அல்லது கொலை முயற்சியிலிருந்து தப்பியவர்களாகவே உள்ளனர். எனவே எமது நாட்டின் அரசமைப்பிற்கமைய அரசுத் தலைவரின் பதவிக் காலத்திற்குப் பிறகு அவர்களின் வாழ்வு பாதுகாக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

காலியில் நேற்று சனிக்கிழமை ஐக்கிய தேசிய கட்சியின் தொகுதி அமைப்பாளர்களை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மறைந்த முன்னாள் அரசுத் தலைவர் ஜே.ஆர். ஜயவர்த்தனவால் கொண்டுவரப்பட்ட 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பு அமெரிக்க மற்றும் பிரான்ஸ் அரசியலமைப்புகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அதற்கமைய அமெரிக்காவில் அரசுத் தலைவர்யொருவர் பதவிகாலத்தின் பின்னர் முன்னாள் அரசுத் தலைவர் என அழைக்கப்படுவதில்லை. மாறாக அவர் உயிர் வாழும் வரை பதவி வகித்தல் மற்றும் அதன் பின்னரான நிலைமை ஆகிய இரண்டு மாத்திரமே காணப்படுகிறது.

எமது நாட்டின் அரசியலமைப்பிற்கமைய அரசுத் தலைவர்யின் பதவிக் காலத்திற்குப் பிறகு அவர்களின் வாழ்வு பாதுகாக்கப்பட வேண்டும், ஏனெனில் அவர்கள் நாட்டுக்காக முக்கியமான முடிவுகளை எடுத்துள்ளனர். உதாரணமாக முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தை நிறைவு செய்வதற்கு இறுதியாக தலைமை வகித்த அரச தலைவர் என்ற ரீதியில் உலகின் சில நாடுகளுக்குச் சென்று அவரால் தனித்து நாடு திரும்ப முடியாது.

ஒருசிலகுழுக்களால்கைகளிலுள்ள ஆயுதங்களைக் கொண்டு கொல்லப்படக் கூடிய அச்சுறுத்தலுடைய தலைவர் ஆவார். சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆளும், எதிர்க்கட்சி தலைவர்கள் அனைவருமே அகால மரணமடைந்தவர்களாவர். அவ்வாறில்லை எனில் அவர் தம்மீதான கொலை முயற்சியிலிருந்து தப்பியவர்களாகவுள்ளனர்.

எனவே இந்தச் செயல்கள் மூலம் சமூகத்தில் வெறுப்பையும் விரோதத்தையும் உருவாக்குவது இலங்கைக்கு நன்மை அளிக்காது. ஜனநாயக நாடுகள் என்றும் முன்னோக்கியே பயணித்திருக்கின்றன. நேபாளம் போன்ற நாடுகள் இந்த வரலாறுகளை கற்றால் தற்போதைய நிலைமைக்கு உகந்ததாக இருக்கும். இலங்கையில் அரசியல் கலவரம் வெடித்த போது முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்தார்.

அவரது வீட்டுக்கு தீவைக்கப்பட்ட போதிலும், அவர் பயந்து ஓடவில்லை. மாறாக ஏனையோரது வீடுகள் எரிக்கப்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். ஆனால் நேபாள பிரதமர் அந்த சந்தர்ப்பத்தில் தப்பிச் சென்றதாலேயே ஏனையோர் பாதிக்கப்பட்டனர் என்பதே எமது நிலைப்பாடாகும். எனவே தேசிய தலைவர் என்ற ரீதியில் முன்னாள் அரசுத் தலைவர் ரணிலுக்கு அந்த கௌரவம் வழங்கப்பட வேண்டும் என்றார்.

# கொலைச் சந்தேகநபர் கைது

பொரளை பொலிஸ் பிரிவில் உள்ள சஹஸ்புர சிறிசர உயன விளையாட்டு மைதானத்தில் இரண்டு பேரை சுட்டுக் கொன்ற சம்பவத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக சந்தேகிக்கப்படும் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் 10 கிராம் 710 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் மோட்டார் சைக்கிளுடன் கைது செய்யப்பட்டு தமன பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொரளை பொலிஸ் பிரிவில் உள்ள சஹஸ்புர சிறிசர உயன விளையாட்டு மைதானத்தில் கடந்த மாதம் 7ஆம் திகதி இரண்டு பேரை சுட்டுக் கொன்று மூவரைக் காயப்படுத்திய குற்றம் குறித்து ஜயவர்த்தனபுர பொலிஸ் விசேட அதிரடிப்படையின் விசேட சுற்றிவளைப்பு பிரிவு விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

அதன்படி, தமன பொலிஸ் பிரிவில் இந்தக் குற்றத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக சந்தேகிக்கப்படும் நபரை அந்தப் பிரிவின் அதிகாரிகள் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

சந்தேக நபர் அம்பாறை, தமன பகுதியைச் சேர்ந்த 34 வயதானவர் எனத் தெரியவந்துள்ளதோடு இதுவரை நடத்தப்பட்ட விசாரணையில், சந்தேக நபர் இராணுவத்தில் பணியாற்றியவர் என்றும், 2015 ஆம் ஆண்டு இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர் என்றும் தெரியவந்துள்ளது.

சம்பவம் குறித்து தமன பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பெக்கோ சமனின் சகா துப்பாக்கியுடன் கைது

விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுவரும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான பெக்கோ சமனின் நெருங்கிய சகா ஒருவர் எம்பிலிபிட்டிய பகுதியில் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

எம்பிலிபிட்டியவின் கங்கேயாய பகுதியில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் இருந்து ரி-81 ரக துப்பாக்கி, 97 தோட்டாக்கள், 2 மெகசின்கள் மற்றும் ஒரு இராணுவச் சீருடை ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.

மேல் மாகாண வடக்கு குற்றவியல் பிரிவு அதிகாரிகள் நடத்திய விசாரணைகளின் போது தெரியவந்த தகவல்களின் அடிப்படையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

முன்னதாக கெஹல்பத்ர பத்மே, கமாண்டோ சலிந்த, பெக்கோ சமன் உள்ளிட்டவர்கள் இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டிருந்தநிலையில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

# பேருந்துகளை அலங்கரிக்க அனுமதித்த சுற்றறிக்கை நீக்கப்படுவதாக அறிவிப்பு

பேருந்துகளை அலங்கரிப்பதற்கும், மேலதிக பாகங்களை பொருத்துவதற்கும் சட்ட அனுமதிகளை வழங்கி வெளியிடப்பட்ட சுற்றக்கை நீக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.



மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் கமல் அமரசிங்கவின் கையொப்பத்துடன் 2023 ஜூன் 2 சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் செப்டெம்பர் 9 அமுலாகும் வகையில் அந்த சுற்றறிக்கை நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, பேருந்துகளை அலங்கரிக்க அனுமதி கோரி பல்வேறு தரப்பினரிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டு, பேருந்துகளில் அலங்காரங்கள் மற்றும் மேலதிக பாகங்களை நிறுவுவது தொடர்பான பல நிபந்தனைகளுக்கு உட்பட்டு குறித்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

# மேலும் 18 இலங்கையர்கள் மியான்மரில் தடுத்துவைப்பு

மியான்மரில் உள்ள சைபர் குற்ற முகாம்களில் மேலும் 13 இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக வெள விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுற்றுலா விசாவில் வந்த ஒரு குழு இந்த சைபர் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக வெள விவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் துஷாரா ரோட்ரிக் தெரிவித்தார்.

மியான்மரின் மியாவடி பகுதிக்கு அருகில் அமைந்துள்ள இந்த சைபர் முகாம்கள் பயங்கரவாத குழுக்களால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

ஏராளமான இலங்கையர்கள் இந்த முகாம்களில் ஏற்கனவே தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

தூதரகங்களின் தலையீட்டால், பல சந்தர்ப்பங்களில் அங்கிருந்த இலங்கையர்களை மீண்டும் நாட்டிற்கு அழைத்து வருவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

கணினித்துறையில் வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கு விரும்பும் சில இலங்கையர்கள் சுற்றுலா விசாவில் வெளிநாடுகளுக்குச் சென்று பின்னர் இதுபோன்ற கடத்தல்காரர்களிடம் சிக்கிக் கொள்கின்றனர் என்று இலங்கை அயலுறவுத்துறை அமைச்சு சுட்டிக்காட்டுகிறது.

# நேபாளத்தின் புதிய பிரதமருக்கு அரசுத் தலைவர் அநுர வாழ்த்து

நேபாளத்தின் இடைக்கால ஆட்சியின் பிரதமராக பதவியேற்றுள்ள சுஷிகா கார்கிக்கு அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அரசுத் தலைவர் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் வலைத்தளத்தில் இவ்வாறு வாழ்த்தினை பதிவேற்றம் செய்துள்ளார்.

நேபாளத்தின் இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராக பதவியேற்றுள்ள சுஷிகா கார்கிக்கு மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

பிரதமரின் தலைமைத்துவத்தின் கீழ் நேபாளம் நிலையான அமைதி மற்றும் ஜனநாயகத்துக்கு திரும்பும் என்று எதிர்பார்ப்பதாகவும் அரசுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## மாகாண ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

பெல்லன்வில ரஜமகா விகாரையின் விகாராதிபதி பெல்லன்வில தம்மரத்ன தேரரை சந்தித்த போதே அவர் இந்தக் கேள்வியை எழுப்பினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது

ஆளும்தரப்பு ஊடகப் பரப்புரைகள் மூலம் முன்னோக்கிச் செல்ல முயற்சிக் கிறது. தேசிய மக்கள் கட்சி ஆட்சியேற்று ஓராண்டுநிறைவடைகிறது. தேர்தலுக்குமுன்னர் வழங்கிய வாக்குறுதிகளில் ஆளும்தரப்பு எதனை நடைமுறைப்படுத்தியுள்ளது?

வாக்குறுதிகளை ஒருபுறம் வைத்து விட்டு ஊடகப் பரப்புரைகளை முன்னெடுப் பதிலேயே ஆளும்தரப்பு அவதானம் செலுத்தி வருகிறது. அவற்றைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியினரை அரசியல் பழிவாங்கல்களுக்கும் உட்படுத்துகிறது.

ஆளும்தரப்பிடம் மாத்திரமின்றி நாடாளுமன்றத்திலும் சபாநாயகரது நடத்தைகளிலும் பிரச்சினையுள்ளது. நாடாளுமன்றத்தில் சபாநாயகர் என்பவர் சகல கட்சிகளுக்கும் பொதுவானவர். அவரால் அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் சமமாகவே நடத்தப்படவேண்டும். ஆனால் தற்போதைய சபாநாயகரின் நடத்தையை அவதானிக்கும்போது நாடாளுமன்றத்தில் ஜனநாயகம் பாதுகாக்கப்படுகின்றதா என்பதே சந்தேகத்துக்கிடமாகவுள்ளது. இது தொடர்பில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக தமது எதிர்ப்புக்களை வெளியிட்டு வருகின்றனர்.

கடந்தகாலங்களில்வெளிநாட்டவர்களுக்கு நாட்டின் நிலப்பரப்பில் ஒரு அங்குலம்கூட வழங்கப்படாது எனக் கூறியவர்கள் இன்று முதலீடு என்ற போர்வையில் பல இடங்களை தாரை வார்த்துக் கொண்டிருக்கின்றனர். நாட்டின் அபிவிருத்திக்கு முதலீடுகள் அவசியமாகும் என்பதை ஏற்றுக் கொள்கின்றோம். அதேவேளை பொது இடங்களை அந்நியர்களுக்கு வழங்கும்போது அவதானத்துடன் செயற்படவேண்டும் என்பதை நினைவுபடுத்துகின்றோம்.

அரசுத் தலைவர்த் தேர்தலின்போது மின் கட்டணம் தொடர்பில் அநுரகுமார மிக அழகான கதைகளை மக்களிடம் கூறினார். மின் கட்டணங்களை மூன்றில் இரண்டு மடங்கால் குறைக்க முடியும் எனக் கூறினார். தனது முதலாவது அமைச்சரவைக் கூட்டத்திலேயே அதற்கான தீர்மானம் எடுக்கப்படும் எனக்கூறினார். ஆனால் இன்று ஓராண்டுநிறைவடைந்துள்ளநிலையில், மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதே தவிர அவர் கூறியபடி குறைக்கப்படவில்லை. அத்தோடு அண்மையில் மூன்றாவது முறையாக மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஊழல், மோசடிகளைஒழித்துமக்களுக்கு நிவாரணம் வழங்கியதாகக் கூறிய ஆளும்தரப்பு அதற்கான நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்காக ஆளும்தரப்பு மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரவேண்டும். தேசிய மக்கள் சக்தியைப் போன்று இதற்கு முன்னர் எந்தவொரு ஆளும்தரப்பும் மக்களை ஏமாற்றவில்லை.

அதேபோன்றுதான் மாகாணசபைத் தேர்தல் விடயத்திலும் ஆளும்தரப்பு மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. மேலும் தாமதப்படுத்தாது வெகு விரைவில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும்.

கடந்த ஆளும்தரப்புக்களைப் போன்று இந்த ஆளும்தரப்பும் மாகாணசபைத் தேர்தலை காலம் தாழ்த்த முயற்சித்தால் அது தவறாகும். மாகாணசபை என்பது மக்களால்தேர்ந்தெடுக்கப்பட்டபிரதிநிதிகளால் நிர்வகிக்கப்பட வேண்டியதாகும். ஆளுநர்களால் அவற்றை தொடர்ந்தும் ஆட்சி செய்ய அனுமதிக்க முடியாது. அவசர நிலைமைகளில் அவ்வாறு செய்ய முடியும். ஆனால் வருடக்கணக்கில் ஆளுநர் ஆட்சிக்கு இடமளிப்பது தவறாகும். எனவே மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு ஆளும்தரப்புக்குச் சவால் விடுக்கின்றோம். மாகாணசபைத் தேர்தலைக் கண்டு எதற்காக அஞ்சுகின்றனர்? இத்தேர்தல் நடத்தப்பட்டால் ஆளும்தரப்புக்கு உள்ள உண்மையான மக்கள் ஆணை வெளிப்படும்.

ஆளும்தரப்பின் அடக்குமுறைகளுக்கு எதிராக ஒன்றிணைந்து குரல் கொடுப்பதைப் போன்று மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்துமாறும் கூட்டு எதிரணியாக ஆளும்தரப்புக்கு அழுத்தம் தருவோம் என்றார்.

## சட்டமூலத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்சவை இல்லாதொழித்தவர்கள்தான் இன்று அரசுத் தலைவர் உரித்துரிமைகளை நீக்கும் சட்டத்துக்கு எதிராகப் பேசுகிறார்கள். இந்தச்சட்டம் தொடர்பில் நாட்டுமக்கள் மத்தியில் நல்லதொரு வரவேற்பு காணப்படுகிறது.

முன்னாள் அரசுத்தலைவர்களாக சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் அரச உத்தியோகபூர்வ இல்லத்தைவிட்டுவெளியேறினார்கள். அவர்கள் ஆதரவாளர்களை அழைத்து ஊடகக் கண்காட்சி நடத்தவில்லை. ஏனெனில் அவர்களுக்கு எதிர்கால அரசியலுக்கான எவ்வித தேவையும் கிடையாது. முன்னாள் அரசுத்தலைவர் மஹிந்த ராஜபக்சவை நாமல் ராஜபக்ச உட்பட பொது ஜன பெரமுனவினர் அரசியல் வெற்றிக்கான ஒரு நாமமாகவே கருதுகிறார்கள்.

தனதுதந்தைக்காக விஜேராம இல்லத்துக்கு ஆட்களை கொண்டு வந்த நாமல் ராஜபக்ச அரசுத் தலைவர் உரித்துரிமைகளை நீக்கும் சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிக்கவில்லை. நாட்டு மக்களை போலியாகவே ஏமாற்றுகிறார்கள்.

இயற்றப்பட்ட இந்தச் சட்டம் தற்போதைய அரசுத் தலைவர் அநுரகுமாரவுக்கும் எதிர்காலத்தில் செல்லுபடியாகும். ஆகவே இது அரசியல் பழிவாங்கல் என்று குறிப்பிடுவது முறையற்றது.

முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ச போருக்குத் தலைமை தாங்கினார் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் போர் வெற்றியை குறிப்பிட்டுக் கொண்டு மக்களின் வரிப்பணத்தின் ஊடாக முழு குடும்பத்தையும் வளப்படுத்திக்கொள்ள அவர் முயற்சித்தது எந்தளவுக்கு நியாயமானது?

இவர் போருக்குத் தலைமை தாங்கியதைப் போன்று நாடு வங்குரோத்து நிலையடைவதற்கும் தலைமை தாங்கினார் என்பதை நாட்டு மக்கள் மறக்க போவதில்லை.

முன்னாள் அரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்சவின் ஆட்சியில் அரச ஆதரவுடன் ஊழல் மோசடிகள் இடம்பெற்றன. எவ்வித நடவடிக்கைகளையும் அவர் மேற்கொள்ளவில்லை. ஊழல்வாதிகள் செல்வந்தர்களாயினார்கள். நாட்டு மக்கள் ஏழையாகினார்கள். நாடு வங்குரோத்து நிலையடைவதற்கு ராஜபக்சக்கள் பொறுப்புக்கூற வேண்டும் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது என்பதை ஒருபோதும் மறுக்க முடியாது என்றார்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுகளில் வங்குரோத்தடைந்திருந்த நாடு இன்று இந்நிலைமையை அடைந்துள்ளது. வரவருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளதோடு செலவுகள் குறைக்கப்பட்டுள்ளன.

அதற்கமையவே கடந்த காலங்களில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய அரசுத் தலைவர்களுக்குரிய சிறைப்புரிமைகளை நீக்குவதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்றக் கூடிய சட்டம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தியினர் இதற்கு வாக்களித்திருக்க முடியும்.

ஆனால் அவர்கள் அதனை செய்யவில்லை. மாறாக இந்த விடயத்தை மறைப்பதற்காக மறுநாள் சபையில் வேறொரு விடயத்துக்காக கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். அதேபோன்று வெகுவிரைவில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை நிறுத்துவதற்கான சட்டமும் நிறைவேற்றப்படும். அதற்கான சட்ட வரைபு தயாரிக்கப்பட்டு வருகிறது என்றார்.


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:

kalaikkathirnews@gmail.com








வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனித்தனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDr
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US
FOR ADMISSION
0701348384

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# JRIDE



இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA



5%

இப்போது நாம்
இலங்கை முழுவதும்

காத்திருப்புக்கு விடுதலை!

www.jride.lk

மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.09.2025இல் வெளியிடப்பெற்றது